3rd February 1966]

Railway link between Tirunelveli and Cape-Comorin

* 72 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether this Government has recommended to the Central Government for the setting up of a Railway Link between Tirunelveli and Cape-Comorin; and

(*b*) whether any survey has been conducted in this regard?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The laying of a new line from Tirunelveli to Trivandrum via Nagercoil with a branch line from Nagercoil to Cape Comorin has been recently recommended to the Government of India for implementation during the Fourth Plan period.

(*b*) Government understand that the requisite traffic and engineering surveys have been undertaken by the Southern Railway.

திரு. வை. சங்கரன் : இந்த சர்வே முழுதும் முடிந்து விட்டதா ? வேலை எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : The information here is that the survey is still in progress.

SRI R. PONNAPPA NADAR : May I know whether this will be given priority and whether it will be taken up at least during the next Five-Year Plan period?

THE HON. SRI V. RAMAIAH : In answer to the main question I have already stated that this scheme has been recommended to the Government of India for implementation during the Fourth Plan period.

தஞ்சை புகைவண்டி நிலையத்தருகில் மேம்பாலம்

* 73 கேள்வி.—திரு. ஆ. துரையரசன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தஞ்சை புகைவண்டி நிலையத்தின் அருகே ஒரு மேம்பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

வீடூர் தேக்கம்

* 74 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வீடூர் நீர்த்தேக்கத்திலிருந்து பருவ காலங்களில் மைலம் பிர்க்கா, வானூர் பிர்க்கா போன்ற வரண்ட பிரதேசங்களில் உள்ள ஏரிகளுக்கு கால்வாய் வெட்டி தண்ணீர் விடும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

[3rd February 1966

(இ) ஆம் எனில், அது எப்போது அமல் நடத்தப்படும்?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, எந்த நேரத்திலே வீடூர்அணை பற்றி விவாதம் வந்தாலும் 'இல்லை' என்ற வார்த்தையே அமைச்சர் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆரம்பத்தில் வீடூர் தேக்கத்திலிருந்து காடாரம்பாக்கம் எல்லை வரையிலும் வானூர் வழியாக தேக்க சர்வே செய்து போட்ட கல்கள் அப்படியே இருக்கின்றன. முக்காலே மூன்று பாகம் தண்ணீர் பாண்டிச்சேரிக்கே போய்க் கொண்டிருக்கிறது. அதைப் பற்றி எப்பொழுது கேட்டாலும் இல்லை, இல்லை என்றே சொல்லு கிறார்கள் அதற்கு காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லை என்று சொல்லுவதற்கு காரணம் அந்த அணையில் தண்ணீர் இல்லை. பாண்டிச்சேரிக்கு அதிகம் போகிறது என்றால், இரண்டு ராஜ்யங்களுக்கும் இடையில் இருக்கும் தேவையைத் தெரிந்து கொண்டு, எப்படி பங்கு போட வேண்டும் என்று முன்பே செய்திருக்கிறார்கள். இந்த அணையின் பூர்வாங்க பரிசீலனையின் போதே அந்த முறையில்தான் செய்திருக் கிறார்கள் அதில் ஏதேனும் சில இடங்கள் விட்டுப் போய் இருக் கலாம். அதனால் சம்பவங்கள் நடந்திருக்கலாம்.

மருத்துவக் கல்லூரிகள்

* 75 கேள்வி—**திரு. ஆ. கு. சுப்பையா** : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி புதிய கட்டடத்திற்கு மாற்றப் பட்டதா?

(இ) மாற்றப்படவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) தஞ்சா வூரில் உள்ள தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி அதற்கெனக் கட்டப் பட்ட புதிய கட்டடங்களில் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றது. மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள புதிய மருத்துவ மனைக் கட்டடங்களை கனம் முதல் அமைச்சர் அவர்கள் 19-11-1963 அன்று திறந்து வைத்தார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், இப்பொழுது ஏற்படும் புதிய மருத்துவக் கல்லூரிகளில் என்னென்ன வியாதிகளுக்குச் சிகிச்சை செய்யப்படும், பழைய மருத்துவ மனையில் எந்த வியாதிகளுக்கு சிகிச்சை செய்யப்படும் என்று அறிவிக்க முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : புதிய மருத்துவ மனைக்கு கட்டடங்கள் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே கொஞ்ச பேஷண்டுகள்தான் இருக்கிறார்கள். சாதாரண வியாதி களுக்குத்தான் சிகிச்சை செய்யப்படுகிறது. கட்டடங்கள் பூர்த்தி யான பிறகு எல்லா வியாதிகளுக்கும் கம்ப்ளீட்டாக சிகிச்சை செய்யப்படும்.